PON VIDYASHRAM GROUP OF SENIOR SECONDARY SCHOOLS

**CLASS - V ஜனவரி மாத பாடப் பகுதிகள்**

1. உரைநடை: -நீதியை நிலைநாட்டி சிலம்பு.

2. (செய்யுள்) அறநெறிச்சாரம்

3. இலக்கணம் :- மயங்கொலிச் சொற்கள்

4. துணைப்பாடம்:-

காணாமல் போன பணப்பை (N.T) (கற்பித்தல் மட்டும் )

(நீவிரும்பிய கதை மாந்தரைப் பற்றி மாணவர்களிடம்

5 - வரிகள் எழுதிவரச் சொல்லுதல்) - Activity

## I. நீதியை நிலைநாட்டிய சிலம்பு.

## (உரைநடை)

**வினா-விடை:**

**1. கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் யாது?**

**விடை:** கண்ணகியின் கணவனான கோவலன் பாண்டிய மன்னனால் தவறான தீர்ப்பளிக்கப்பட்டு கொல்லப்பட்டான். இதுவே கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் ஆகும்.

**2. புகார் நகரின் சிறப்புகள் யாவை ?**

**விடை:** ஒரு புறாவுக்காக தன் உடலையே தந்த சிபி மன்னனும், பசுவிற்கு நீதி வழங்குவதற்காக , தன்மகனை தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச்சோழனும் வாழ்ந்த சிறப்புக் குரியது புகார் நகரம் .

**3. பாண்டிய மன்னனின் வெண்கொற்றக் குடை வீழக் காரணமென்ன?**

**விடை:** பொற்கொல்கவன் கூறியதைக் கேட்டு ஆராயாமல் கோவலனுக்குத் தண்டனை அளித்தான் பாண்டிய மன்னன். ஆதலால் அவனுடைய வெண்கொற்றக் குடை வீழ்ந்தது.

## II. இலக்கணம் - மயங்கொலிச் சொற்கள் நிரப்புக

1. மயங்கொலி எழுத்துகள் மொத்தம் எட்டு
   அவை: ண, ந, ன, ர, ற, ல, ழ, ள - ஆகும்.
2. சாலையில் பள்ளம். இருந்ததால், ஓட்டுநர் பேருந்தை மெதுவாக ஓட்டிச்சென்றார்.
3. கடலூருக்குச் செல்ல எந்த வழியாகப் போக வேண்டும்.
4. கூண்டிலிருந்த கிளி யைச் சுதந்திரமாகப் பறக்கவிட்டான் எழிலன்.
5. தாய்ப்பசு இல்லாமையால் நாளடைவில் கன்று இளைத்துப் போனது.
6. கடல் அலையில் கால் நனைத்து மகிழ்வது அனைவருக்கும் பிடிக்கும்.

## III. அறநெறிச் சாரம் - செய்யுள்

**வினா-விடை:**

**1. நாம் பேசும் போது கடைப்பிடிக்க வேண்டிய பண்பு யாது?**

**விடை:** நாம் பேசும்போது குற்றம் ஏற்படாமல் பேசுவதைக் கடைபிடிக்க வேண்டும்.

**2. மிக உயர்த்த பண்புகளாக அறநெறிச்சாரம் குறிப்பிடுவதை எழுதுக?**

**விடை:** உயர்ந்த பண்புகள் :

- குற்றம் ஏற்படாமல் பேசுதல்.
- துன்பங்கள் உண்டான போதும் மனம் தளராமலிருத்தல்.
- தம்மை வெறுப்பவரிடத்தும் வேற்றுமை பாராட்டாத உண்மை நிலை.